பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

ஈழநாடு

EELA NADU

மலர்: 19 பங்குனி 3 ரபி அவ்: 25 இதழ்: 34

யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-3-77

அரிசி, மா விலைகளும் குறைக்கப்படலாம்!

கொழும்பு, செவ். அரிசி, மா ஆகிய அத்தியாவசிய பாவனைப்பொருட்களின் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைரூபாவின் பெறுமதி அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்தே அரிசி, மா, உட்பட இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை உள்நாட்டில் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூபாமதிப்பு அதிகரிப்பினால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்காக வெளிநாடுகளுக்கு முன்னரைவிடக் குறைந்த தொகைப் பணம் கொடுக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் மீதமாகும் பணத்தில் மேலும் கூடியளவு பொருட்களை இறக்குமதி செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் அத்துடன்

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழர்கூட்டணி - பிரதமர்

சந்திப்பு இன்று நடக்கிறது!

தொண்டமானும் பங்கு;

'அரசை நீடிக்கும் நோக்கத்துடன் இது நடைபெறவில்லை'

அமைச்சர் குமாரசூரியர் சொல்கிறார்

கொழும்பு, புதன்

தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள் சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நடத்தவிருந்த பேச்சுவார்த்தை இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. பிரதமரிடமிருந்து திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு இது ஸ்ரீந்தமான அழைப்பு நேற்றுத் தபால் மூலம் கிடைத்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் இப்பேச்சு வார்த்தையின்போது திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. எஸ். தொண்டமான், திரு. ஜி. கதிரவேலுப்பிள்ளை எம். பி., திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று தமிழர் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழர் கூட்டணி-பிரதமர் சந்திப்பு சம்பந்தமாக தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சரும் வீடமைப்பு அமைச்சருமான திரு. செ. குமாரசூரியரிடம் 'ஈழநாடு' பிரதிநிதி தொடர்பு கொண்டபோது, தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் பிரதமமந்திரி அக்கறை கொண்டுள்ளார். அதற்கு முன்னேடியாகவே இப்பேச்சுவார்த்தை நடக்கிறது' என்றார்.

தமிழர் கூட்டணியின் ஒத்துழைப்புடன் தேர்தலை ஒத்திவைக்க அல்லது அரசின் பதவிக்காலத்தை நீடிக்கும் எண்ணம் இருக்கிறதா என்று அவரிடம் கேட்டபோது, ''அப்படி ஒன்றுமில்லை. தேர்தல் நிச்சயம் நடக்கும். இன்னும் 2 மாதகாலத்தில் அரசு கலைக்கப்படும்'' என்றார்.

இம்மாதம் 9-ம் திகதி இச் சந்திப்பு நடைபெற ஏற்பாடாகியிருந்த போதிலும் பிரதமர் கடைசி நேரத்தில் இதனைஒத்தி வைத்து, பிறிதொரு திகதியில் இதுநடைபெறும் என்று அறிவித்திருந்தது தெரிந்ததே.

(ம-ஆ)

வாசுதேவாவை அழைத்து என்.எம். பேச்சுவார்த்தை

கொழும்பு, செவ்வாய் சமசமாஜக்கட்சி வாலிப இயக்கத் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காராவை சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

திரு. வாசுதேவ புதிய தொழிற்சங்கம்ஒன்றைஅமைத்ததினால்கட்சியில்எழுந்த நெருக்கடிஇந்த சந்திப்பின்மூலம்தீர்க்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழிற்சங்கம் மீது தாம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள்பற்றி உடனே விசாரணை நடத்த வேண்டும், கட்சி மகாநாட்டை உடனே கூட்டவேண்டும், இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைக்கப்படுவதனால் அதன் செயல்திட்டம் கட்சியின் சகல கிளைகளாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இவ் வாறான நிபந்தனைகளின் அடிப்படையிலேயே டாக்டர் பெரேராவின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தையில் திரு நாணயக்கார கலந்து கொண்டதாக

(8-ம் பக்கம் பார்க்க)

மாநகரசபை 500 ஊழியர் ஒரு நாள் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாநகரசபையின் சாரப்பகுதி, சுகாதாரப்பகுதி, மராமத்துப் பகுதி, தண்ணீர்ப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் நாளை மறுதினம் (வெள்ளிக்கிழமை) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில்ஈடுபடவள்ளனர்.

இந்த ஊழியர்களின் நாள் சம்பளத்தை மாதச் சம்பளமாக்கவும், தற்காலிக தொழிலாளர்களை நிரந்தமாக்கவும் கோரி இந்த வேலை நிறுத்தம் நடைபெறுவதாகக் கூறப்பட்டது.

இதனால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை பொறுத்துக் கொள்ளுமாறு பொதுக் கைத் தொழில் தொழிலாளர் சங்க யாழ். மாநகரசபைக் கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த ஊழியரின் அறிக்கை விபரம் வருமாறு:

மாநகர சந்தையில் ஊழியர்கள் அளவுக் கதிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்களென்பதும் அவர்களை உடனடியாக நிற்பாட்டவேண்டுமென உள்ளூராட்சி ஆணையாளர் உத்தரவு இட்டிருந்த போதும் அவ்வீதம் ஊழியர்களை நீக்க அவர்களை வேலையில் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டிருப்பது மாநகரசபை ஊழியர்கள் யாவரும் அறிந்த விடயமாகும்.

''வேலைநிறுத்தத்துக்கு உரியநேரம் இது வல்ல''

வேலை நிறுத்தம் தொடர்பாக யாழ். மாநகர சபையின் நிரந்த ஊழியர் ஒருவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், மாநகரசபையால் நியமனம் பெற்ற ஊழியர்களின் சம்பளவிடயம் சம்பந்தமாக புதிய ஆணையாளர் கடந்த ஆறு மாத காலமாக பரிசீலனை செய்துவந்ததாகவும் தற்போது தமது அறிக்கையை விசேடஆணையாளரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்

(7-ம் பக்கம் பார்க்க)

வண்ணைசிவன்உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,புதன்

யாழ். வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்தமாதம் 2-ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும் தினசரி 6 மணி முதல் 7-30 மணிவரை நல்லைஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவிளையாடற் புராண விரிவுரை

(8-ம் பக்கம் பார்க்க)

கொலை, கொள்ளைகள் பற்றி ஆராய உயர் பொலிஸ்குழு

கொழும்பு, செவ். நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்று வரும் கொலை, கொள்ளைகளுக்கான உண்மையான காரணங்களைஆராய கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் அடிக்கடி கொள்ளைகள் கொலைகள் நடைபெறுவது அதிகரித்து வருவது குறித்து பொலிஸ் இன்பெக்டர் ஜெனரல் கூட்டிய மாநாட்டில் ஆராயப்பட்டது.

இம்மாநாட்டில் பொதுத் தேர்தல் அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பல இடங்களில் கொலை, கொள்ளை போன்ற அசம்பாவித சம்பவங்கள் தடைபெற்று வருவதைக்குறைக்க வேண்டிய அவசியம் பற்றி ஆராயப்பட்டதாக தெரிகிறது.

வடபிராந்திய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலு சனிவிரத்தினை தலைமையில் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், பொலிஸ் அதிபர் திரு. குணத்திலகா, பொலிஸ் அதிபர் திரு. ஹேரத் பொலிஸ் அதிபர் திரு. அம்பிகாபதி ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வித சம்பவங்கள் எப்படி நடக்கின்றன? இவற்றை எப்படிக் குறைக்கலாம்? இவற்றிக்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? இவைகள் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றனவா? என்பன போன்றவை குறித்து இக்கமிட்டி ஆராயும்.

(ம-ஆ)

இந்தியப் பொதுத்தேர்தல் இன்று ஆரம்பம்

32கோடி மக்கள் வாக்களிப்பர்

தமிழ் நாட்டில் 2 நாள் வாக்குப்பதிவு

புதுடில்லி, மார்ச் 15

இந்தியாவின் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த ஆறுவது பொதுத் தேர்தல் நாளை புதன் கிழமை ஆரம்பமாகிறது.

உலக நாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ள இந்தத் தேர்தலில் இந்திய வரலாறு இதுவரை கண்டிராத கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

32 கோடி மக்கள் வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படும் இத்தேர்தலின் வாக்களிப்பு தாளையும் மின்னர் இம் மாதம் 18, 19, 20 ம் திகதி களிலும் நடைபெறும்.

லோகசபையின் 542 தொகுதிகளில் 540 தொகுதிகளுக்கான வாக்கெடுப்பு இன்று ஆரம்பமாகின்றது.

540 தொகுதிகளிலும் 2,437 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

15 கோடி ரூபா செலவு

இத்தேர்தலுக்கு 15 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

30 லட்சம் ஊழியர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

3 லட்சத்து 50 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் 14 தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(8-ம்பக்கம் பார்க்க)

யாழ்லயன் களியாட்டு விழா-77

(யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ம் திகதி பிற் பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர், ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

கிழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 19—20-ம் திகதி களில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களி யாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட் டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என் பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப் பாளி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிக ளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்த விதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதி களுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறு திப்படுத்துகிறேன், போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன் களே போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாய ஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவ னியில் வினோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாண வர் அணிவகுப்பும் 'பான்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் வினோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட் டம் வல்வெட்டியில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட ஆணவர்களுக்கு 25 மைல் சைக் கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி., [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ். அழகு ராணிப் போட்டி.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்ப வர்களாக இருக்கவேண்டும். 18 வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வானவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி .....
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்.....

விலாசம்: .....

வயது: .....

விளையாட்டுப் போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித் துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

.....
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப் பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற் கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்

.....

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11) மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந் தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 16-ந் திக திக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

ஈழநாடு அன்பளிப்பு

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதிநிர்வாகச் சட்டம் 283-ம் பிரிவின் கீழ்

இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

பொலிகண்டி சிதம் பரப்பிள்ளை குமாரசாமி என்பவரின் மரணசாத னம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 328

பொலிகண்டி சிதம்பரப் பிள்ளை குமாரசாமி கைம் பெண் தங்கம்மா
விண்ணப்பக்காரி
மற்றும்
1. பொல்கண்டி கதிர் காமர் சிதம்பரப்பிள்ளை
2. மை பெண் வள்ளியம் மைப்பிள்ளை மறுநாமம் வள்ளிப் பிள்ளை
எதிர்வாதிகள்

280-ம் 1-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 11-2-77-ந் திகதியிடப்பட் டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட் டுள்ளதென திருப்தியடைந்த தன்பேரில் 1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ந் திகதி அல்லது அதற்கு முன்னதாக எவராவுதல் எதிர்க் காரணம் காட்டினலன்றி 28-8-73-ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ் பொ. கணபதிப் பிள்ளை முன்பாக 10922 இலக்கத்தில் முடிந்த மரண சாதனத்தின் மூலப்பிரதி இக்காரியாலயத்தில் வைப் பில் வைக்கப் பட்டிருக்கிற தெனவும் சொல்லப்பட்ட மரணசாதனம் நிரூபிக்கப் பட்டிருக்கின்றதெனவும் மேற் சொல்லப்பட்ட விண்ணப்பக் காரி சொல்லப்பட்ட மரண சாதனத்தின் மூலமாக காலஞ் சென்றவர் விட்டுச்சென்ற சொத்துக்களுக்கு முழு உரிமை யாளர் என்ற முறையிலும் விண்ணப்பகாரரே மரண சாதன அதிகாரப்பத்திரம் பெறுவதற்கு உரிமையுடைய வரென்றும் அவ்வண்ணமே மரணசாதன அதிகாரப்பத்தி ரம் பெறுவதற்கு உரிமை யுடையவரென்றும் அவ்வண் ணமே மரணசாதன அதிகாரப் பத்திரம்விண்ணப்பக்காரருக்கு வழங்கப்படுமென்றும் யாழ்ப் பாண நீதிநிர்வாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதி காரத்தின்கீழ் செயல்பட்டு இத் தால் கட்டளையிடுகிறேன். 1977-ம் ஆண்டு மாசி மாதம் 11-ந் திகதி.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி,
5695 யாழ்ப்பாணம்.

அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ்ப்பாணமாநகரசபையின் நிறைகள், அளவைகள் பகுதி, நிறைகள், அளவைகளைப் பரி சோதனை செய்வதற்கு அலு வலக நாட்களில் பிற்பகல் 1-30 மணி தொடக்கம் பிற் பகல் 3-30 மணி வரை மட் டுமே திறந்திருக்கும். இந்நேர மாற்றம் எதிர்வரும் 31-3-77-ந் திகதியில் இருந்து அமுலுக்கு வருமென இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர மண்டபம்,
யாழ்ப்பாணம்,
11-3-77. 5700

விற்பனைக்கு

25 ஸ்ரீ 174 இலக்க [Baby Dexta] டிராக்டர் புதி தாக திருத்தி அமைக்கப்பட்ட நிலையில் பெட்டியுடன் விற் பனைக்குண்டு. தொடர்பு கொள்க. வ. சிவயோகநாதன், "நாகலிங்க வாசா", மானிப் பாய் மேற்கு, மானிப்பாய். 5687

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

கேள்வி விளம்பரம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 5000 வெற்றுச்சாக்குகள் விற் பனைக்கு உண்டு. கேள்விப்பத் திரத்தை, வைப்புப் பணமாக ரூ. 50/-ஐயும், கேள்விப்பத்தி ரத்திற்கு ரூபாய் 2/-ஐயும் கட்டி இக்கந்தோர் நேரத்தில் பொதுமுகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் பெறும் கடைசித் திகதி 30-03-77. கேள்விப்பத்திரம் 30-03-77-ந் திகதிக்குப் பிந்தாமல் "பொது முகாமையாளர், பருத்தித் துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பப்படும் தபால் உறை யின் மேற்பக்க இடது மூலை யில் "வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம்" என்று எழுதப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
5701

கேள்வி விளம்பரம்

கிராமசபை, வட்டுக்கோட்டை.

வட்டார வேலைகளுக்கு கல்லு, மக்கி, மணல் விநியோகித்தல்

1977ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 30-ந் திகதி காலை 9-30 மணிவரை மேற் படி வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத் திரங்கள் 29-3-77-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை யும் ரூபா 25/- ரெண்டர்பண மாகவும் ரூபா 10/- ரெண்டர் பத்திரப்பணமாகவும் கட்டு வதன்பேரில் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் ஊர்மன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ச. நிற்சிங்கம்,
தலைவர்,
வட்டுக்கோட்டை
ஊர்மன்றம்.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
11-3-77 5689

வரி விளம்பரம்

கல்வி

சித்தி நிச்சயம். ஜி. ஏ. கியூ பரீட்சை அண்மைக்கால பரீட்சை வினாக்களும் விடை களும் பொருளியல் ரூபா 29/10 தபாற்செலவு ரூபா 1/- யூனிட் டெட் இன்ஸ்ரியூட்ஸ், நெல்லி யடி, கரவெட்டி. 5692

திருவளனூர் கல்வி நிலையத் தில் G.C.E. O/L-A/L-G.A.Q. வகுப்புகளுக்கு வீஞ்ஞான – வர்த்தக-கலை பாடங்களுக்கு ஆண்-பெண் இருபாலாருக்கும் பகல்வேளை 7-3-77 திங்கள் தொடக்கம் நடைபெறுகிறது. இளவாலை புனித சூசையப்பர் விடுதிச் சாலை, இளவாலை. விடுதி வசதியுண்டு. போஷகர்: சங் கைக்குரிய சகோதரி. றெக்ரர், சென். ஜோசப் விடுதி, இள வாலை. 5698

தேவை

உடனடியாகத் தேவை. அழ காகச் செய்யப்பட்ட பனையோலை விசிறிகள் 500 உடனடி யாகத் தேவை. தொடர்பு கொள்ளவும். மில்க்வைற், தபாற்பெட்டி 77, யாழ்ப் பாணம். 5702

சகல உடுப்புக்களும் வெட் டித் தைக்கத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. சகல சான் றிதழ்களுடன் நேரில் வரவும். 18-3-77 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தெரிவு செய் யப்படும். எல். ஆர். செல் லையா, 7, பலாலி வீதி, ஆரிய குளம், யாழ்ப்பாணம். 5696

FOR SALE

Refrigerator, Household and Electrial goods, Furniture Cutlery etc. in excellent condition. Contact at No. 46, CollegeRoad, Kankesanthurai. 5694

இன்று வேலணையில் படக்காட்சி

வேலணை, புதன் இலங்கை—சீன நட்புறவுச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் இன்று புதன்கிழமை வேலணை வங்களாவடி சந்திக்கு அருகாமையில் இலவசமாக புகைப்படக் கண்காட்சி ஒன்று நடைபெறவிருக்கின்றது.

இப் புகைப்படக் கண்காட் சியில் சீனாவின் தேசிய விளை யாட்டுக்கள், கப்பல் கட்டும் தொழிற்சாலைகள், கடலில் மீன் வள ஆராய்ச்சிகள்போன்றவை முக்கிய காட்சிகளாகக் காண் பிக்கப்படவிருக்கின்றன.

(உ)

ச. ச. நிலைய முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், புதன் பஷையூர் மக்கள் முன்னேற் றச்சங்க- சனசமூக நிலையம் தனது வெள்ளிவிழாவை முத் தமிழ் விழாவாகக்கொண் டாடவிருக்கிறது.

"பண்ணும் பரதமும்"

[முத்திங்கள் சங்கீத பரதநாட்டியச் சஞ்சிகை]

N. C. G. E., N. C. O. M. S.

மாணவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி

ஒருவருடச் சந்தா
(தபால்செலவு உட்பட) ரூபா. 8/-

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
கௌரவ செயலாளர்,

இலங்கை இசைப் பேரவை

மே / பா. கலாநிலையம் லிமிட்.,
303, கே. கே. எஸ். வீதி :-: யாழ்ப்பாணம்.

இந்திராவின் புதல்வரைக் கொலை செய்ய முயற்சி!

முகமூடிக்காரர்கள் துப்பாக்கியால் சுட்டனர்

சஞ்சய் காயமின்றி உயிர் தப்பினர்

புதுடில்லி, மார்ச் 15

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய மேற்கொள்ளப் பட்ட முயற்சியில் அவர் எதுவித காயமுமின்றி உயிர்தப்பினர்.

திரு. காந்தி சென்றுகொண்டிருந்த 'ஜீப்'பை நோக்கி முகமூடிஅணிந்த இனந்தெரியாத சிலர் துப்பாக்கியால் 5 முறை சுட்டதாகவும் அத் துப்பாக்கி வேட்டுக்கள் எதுவும் அவரைத் தாக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

உத்தரப்பிரதேசத்திலுள்ள தமது தொகுதியில் தேர்தல் பிரசாரவேலையில் ஈடுபட்டிருந்தபோது திரு. சஞ்சய் காந்தி மீது கொலைமுயற்சி மேற்கொள்ளப்பட்டதாம்.

கடந்த இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:

திரு. காந்தி, ஜீப் ஒன்றில் வேறு சிலருடன் சென்று கொண்டிருந்தபோது வளைவு ஒன்றில் திடீரெனத்தோன்றிய துப்பாக்கிக்காரர்கள் அவரது ஜீப்பை நோக்கிச் சுட்டனராம். 5 முறை சுடப்பட்ட துப்பாக்கி ரவைகளில் மூன்று, ஜீப்பைத் தாக்கியதாகவும் அதில் ஒன்று திரு. காந்தி அமர்ந்திருந்த 'சீட்'டைத் துளைத்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

உதவியாளர்களுக்கு சிறுகாயம்

ஜீப்பிலிருந்த அவரது உதவியாளர்கள் இருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டனவாம்.

திருப்பிச் சுட்டனர்

துப்பாக்கிச்சூட்டையடுத்து திரு. காந்தியின் உதவியாளர் ஒருவர் திருப்பிச் சுட்டபோதிலும் முகமூடிக்காரர்கள் தப்பி ஓடிவிட்டனராம்.

கண்டனம்

இக் கொலைமுயற்சி சம்பவத்திற்கு பல மத்திய மாநில அமைச்சர்களும் தலைவர்களும் கண்டனம் செய்துள்ளனர். (இ)

தேர்தல் முடிவுகளை எதிர்த்து பாக்.கில் ஆர்ப்பாட்டம்

கராச்சி, மார்ச் 15

பாகிஸ்தான் தேர்தல்முடிவுகளை எதிர்த்து நாடுமுழுவதும் எதிர்க்கட்சினர் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்.

இதையடுத்து பல எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஒருவர் பலி!

கராச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை யடுத்து ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்குமிடையே இடம் பெற்ற கலவரத்தில் ஒருவர் பலியானார் என்றும் 50க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ)

ஊர்வலத்தில் 3 ஆயிரம் மாட்டு வண்டிகள்

சென்னை, மார்ச் 15

மத்திய அமைச்சர் திரு. வி. சுப்பிரமணியத்தை ஆதரித்து அவரது தொகுதியான பழனியில் இடம் பெற்ற மாபெரும் ஊர்வலத்தில் 3 ஆயிரம் மாட்டுவண்டிகள் கலந்துகொண்டன.

சுமார் 15,000 சைக்கிள்களும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனவாம். (இ)

புதிய 'ஹிந்தி எதிர்ப்பு வீரர்' அன்று 'காதல்கீதம்' பாடினர்

எம். ஜி. ஆரை சாடுகிறார் கருணாநிதி

சென்னை, மார்ச் 15

''யார் பிரதமராக வந்தாலும், இங்கே இருமொழித்திட்டத்திற்குப் பதிலாக இந்தியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்று சொன்னால் அதை எதிர்க்கின்ற அணியாய் தி. மு. க. இருக்குமே ஒழிய புதிதாக இப்போது இந்தி எதிர்ப்புப் பிரசாரம் செய்யத் தொடங்கியிருப்பவர்கள் அல்ல.''

இவ்வாறு தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி சென்னையில் கழக வேட்பாளர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கலைஞர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

மீண்டும் 1965 வரும்

''மொரார்ஜியோ அல்லது வேறு யாரோ பிரதமராக வந்து இங்கே இருமொழித்திட்டத்திற்குப் பதிலாக இந்தியை கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்று சொன்னால் மறுபடியும் '1965' தமிழ்நாட்டில் வந்தே தீரும். மீண்டும் ஒரு 'பாளையங்கோட்டை' யைச் சந்திக்க இந்தக் கருணாநிதி தயாராக இருப்பான்.

போராட்டவேளையிலும் படப்பிடிப்பில் எம். ஜி. ஆர்.

ஆனால் இன்று 'இந்தி எதிர்ப்பு' வீரர்களாகக் காட்சியளிக்கிறார்களே அவர்கள் எல்லாம் ''கோவா'' கடற்கரையிலேதான் அப்போதும் இருப்பார்கள். எட்டுப்பேர் திக்குளித்துச் செத்தார்களே; அப்போது எங்கே போயிருந்தார் புதிய இந்தி எதிர்ப்பு வீரர் எம். ஜி. ஆர்.

நூறுபேர் மாணவர்கள்—பொதுமக்கள் இறந்தார்களே; அப்போது எங்கே போயிருந்தார் இவர். ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டார்களே அப்போது எங்கே போயிருந்தார் இவர்?

''மொழிக்கனல்! புரட்சி! கிளர்ச்சி! தமிழகத்திலே தாய்மார்களின்வேதனைக்கண்ணீர், துப்பாக்கிரவையால் துடிதுடித்துச் சாகிறார்கள் பச்சிளம் குழந்தைகள். எட்டுப்பேர்தங்கள் தேக்குமரத் தேகத்திற்கு தீ வைத்துக்கொண்டு ''தமிழ் வாழ்க! இந்தித் திணிப்பு ஒழிக'' என்று கூறிக்கொண்டு செத்தார்களே; அப்போது கோவா கடற்கரையிலே காதல் கீதம் பாடிக்கொண்டு' அன்பே வா' படப்பிடிப்பிலே ஈடுபட்டுக்கொண்டிருந்த அவருக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

மாற்றுக்கட்சி எம். பி. க்களுக்கு 'ஜனதா'வில் இடமில்லை

மொரார்ஜி கூறுகிறார்

புதுடில்லி, மார்ச், 15

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றபின்னர் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஜனதா கட்சியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்என்று ஜனதாகட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளஅறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

தேர்தலில் லோகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டபின்னர் ஜனதா கட்சியில் சேரவிரும்பும் மாற்றுக் கட்சியினர் தமது பதவியை ராஜினாமாச்செய்துவிட்டு மீண்டும் எமது கட்சியின்சார்பில் போட்டியிட்டு வெற்றிபெறவேண்டும் என்றும் திரு. தேசாய் கூறினர். (இ)

யாழ் புற்றுநோய்
ஆஸ்பத்திரி நிதிக்காக

யாழ் லயன்
களியாட்டு விழா

போட்டியோ: மாட்டுவண்டிச்சவாரி
- இரட்டை மாட்டுவண்டி
- ஒற்றை திருக்கல் வண்டி

இடமோ: யாழ். முற்றவெளி மைதானம்
காலமோ: 20-3-77 ஞாயிற்றுக்கிழமை
நேரமோ: மாலை 2 மணி
பங்கு பற்றுபவர்களோ: மாலை 1 மணிக்கு சமுகந்தாரீர்
பரிசில்களோ: கவர்ச்சியானவை
பிரவேசமோ:
- போட்டியாளர்களுக்கு-ரூபா 10/-
- பார்வையாளர்களுக்கு-இலவசம்

ரசிகர்களோ: திரண்டுவாரீர்
நடாத்தும் ஆதரவாளர்களோ: தங்களது

ரோரு ஸ்தாபனமாம்

இந்தியத் தேர்தல் அரங்கு

எம். ஜி. ஆர்—இந்திரா சினிமா?

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்குப் பக்கத்தில் எம். ஜி. ஆரின் படத்தைப்போட்டு சுவரொட்டி வெளியிடப்பட்டது குறித்து தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கிண்டல்செய்துள்ளார். ''இச்சுவரொட்டியை திடீரென பார்க்கின்ற பாமர மக்கள் இது என்ன சினிமா? எப்போது ரிலீஸ்? என்றல்லவா கேட்கிறார்கள்'' என்று அவர் கூறியுள்ளார்.

தி. மு. க.-ஜனதா இணைப்பு சட்டசபைத் தேர்தலில் அவசியமில்லை

லோகசபைத்தேர்தலில் மேற்கொள்ளப்பட்ட தி. மு. க.-ஜனதா-மார்க்ஸிஸ்ட் கட்சி இணைப்பு தமிழ்நாட்டு சட்டசபைத்தேர்தலிலும் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறினர்.

தேர்தல் அரசியல் கட்சியின் தலைவிதியை நிர்ணயிக்காது

எதிர்வரும் தேர்தல் அரசியல் கட்சிகளின் தலைவிதியை நிர்ணயிக்கமாட்டாது; இந்நாட்டின் எதிர்காலத்தைத்தான் நிர்ணயிக்கும் என்றும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்துள்ளார்.

பழனியில் மும்முனைப்போட்டி

மத்திய நிதி அமைச்சர் திரு. வி. சுப்பிரமணியம் போட்டியிடும் பழனித்தொகுதியில் மும்முனைப்போட்டி இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

புரட்சிதான்வேண்டும் என்கிறார் இந்திரா

எதிர்க்கட்சியினர் இப்போது புரட்சிக்கோஷம் எழுப்பி வருகின்றனர். நானும்புரட்சியையேவிரும்புகிறேன். அதுநாட்டுக்கு நன்மை பயக்கும் புரட்சியாக சமாதானப் புரட்சியாக இருக்கவேண்டும் என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினர்.

மணிவாக்கு

ஒரு முறை அடகுவைத்த நேர்மை பின்னுல் மீள் வதே இல்லே. -தோமஸ் மிடில்டன்

சமநாடு
THE EELANADU

இந்தியத் தேர்தல்

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் மிக பரபரப்பானதென வர்ணிக்கப்படும் பொதுத் தேர்தல் இன்று ஆரம்பமாகிறது.

இந்திய ஆட்சி மன்றத்துக்கு நடைபெறும் ஆருவது பொதுத் தேர்தல் இது.

ஆட்சிமன்றத்தின் மொத்தம் 542 தொகுதிகளில் 540 தொகுதிகளிலும் 2437 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இரு தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்கள் இருவர் ஏற்கனவே போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தேர்தலில் முப்பத்திரெண்டு கோடிப்பேர் வாக்காளர்களாக உள்ளனர்.

ஆளும் காங்கிரஸ் கட்சியும், எதிர்க்கட்சிகளின் கூட்டணியான ஜனதா கட்சியும் தங்களுக்கே வெற்றி என்று கூறுகின்றன.

மத்தியில் உறுதியான அரசாங்கமொன்றை ஏற்படுத்த காங்கிரஸ் கட்சியாலேயே முடியும் என்று பிரதமர் இந்திரா வலியுறுத்துகிறார்.

ஜனதா கூட்டணி வெற்றி பெற்று அரசாங்கம் அமைப்பதை காங்கிரஸ் கட்சியால் தடுக்க முடியாது என்று திரு. மொராஜி தேசாய் நம்பிக்கையோடு கூறுகிறார்.

இந்தியசுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பழம் பெரும் தலைவர்கள் பிரதமர் இந்திராவுக்கு எதிராக ஒன்று சேர்ந்துள்ளனர்.

காங்கிரஸ் என்ற பெயர் இந்திய மக்கள் உள்ளத்தில் வேரூன்றிய பெயர். இதை மக்கள் உள்ளத்திலிருந்து அகற்றுவது அவ்வளவு சுலபமல்ல.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இந்தியாவில் ஜனநாயகம் அழிந்து விட்டதென்றும் சர்வாதிகார ஆட்சிக்கு இந்திரா வழிவகுத்து விட்டார் என்றும் மேல் நாடுகளில் பிரசாரம் நடைபெற்றது.

இந்தியாவில் ஜனநாயகம் அழியவில்லையென்று பிரதமர் இந்திரா மறுப்புத்தெரிவித்தார். ஆட்சி மன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குத் தேதி நிர்ணயித்ததன் மூலம் ஜனநாயகத்திலுள்ள நம்பிக்கையைச் செயலில் எடுத்துக்காட்டினர்.

தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்து நேற்றுடன் முடிவடைந்தது.

சில இடங்களில் வன்செயல்களும் இடம்பெற்றன. சர்ச்சைக்குரியவராக விளங்கும் பிரதமர் திருமதி இந்திராவின் மகன் சஞ்சய் காந்தியைக் கொலை செய்யவும் முயற்சி நடைபெற்றிருக்கிறது.

தேர்தல் அமைதியாகவும் சுதந்திரமானதாகவும் நடைபெறுவதற்கு வேண்டிய எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

அமைதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெற்றுல்தான் ஜனநாயகத்துக்கு மதிப்பும் கௌரவமும்.

இலங்கை உட்பட ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் பல வழிகளில் இந்தியா வழிகாட்டியாக விளங்கியிருக்கிறது.

ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பலவும் அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலைபெறுவதற்கு இந்திய சுதந்திரப் போராட்டம் காரணமாக இருந்திருக்கிறது.

ஜனநாயக ஆட்சி முறையிலும் இந்தியாவைப் பின்பற்றிய நாடுகள் பல.

இன்று ஆரம்பமாகும் இந்திய ஆட்சிமன்றத்துக்கான பொதுத் தேர்தல் முடிவுகளும் ஆசிய நாடுகள் பலவற்றில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துமென்று எதிர் பார்க்கலாம்.

அபேட்சகர்கள் அறிமுகம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சிகள் சார்பிலும், சுயேச்சையாகவும் போட்டியிடவிருக்கும் தமிழ் பேசும் அபேட்சகர்களை அறிமுகம் செய்துவைக்க விருக்கிறோம்.

தேர்தலில் போட்டியிடவிருக்கும் தமிழ் பேசும் அபேட்சகர்கள், தங்கள் புகைப்பட்ப் பிரதி ஒன்றுடன் தங்களின் கொள்கை; எதிர்காலத்திட்டம், கடந்த கால சேவை ஆகியவற்றை, தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதி **'ஆசிரியர், ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம்''** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த பின்னர் **'அபேட்சகர்கள் அறிமுகம்'** தொடர்ந்து வெளிவரும். நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் தினத்திற்கு முன்னர் இவ்விபரங்கள் செய்தியாக வெளிவராது. விரும்பினுல் விளம்பரமாக வெளியிடலாம். (—ஆ.ர்)

ஆசிரியருக்கு கடிதம்

பரீட்சை முடிவுகள்

1976—ம் ஆண்டு க. பொ. த. பரீட்சை சாதாரண முடிவுகள் வராத நிலையை அறியத்தவிக்கிறேன். என்போன்ற எத்தனை பேர் வராதநிலையில்இருக்கிறார்களோ தெரியாதுஉள்ளேன்.

பரீட்சை திணைக்களத்தினருக்கு பதினைந்து சத முத்திரை ஒட்டி தபால்போட்டு பதில் இல்லாமல் இருக்க, அதனைத் தொடர்ந்து பதிவுத்தபால் அனுப்பியும் பதில்இல்லை. இப் பரீட்சை முடிவுகளை எதிர் பார்த்து பெற்றூர் பிள்ளைகளின் மேல் சந்தேகம் கொள்ளாமல் இருப்பதற்கு இது ஒரு வழியென நம்புகிறேன்.

மாணவன்
மா. அற்புதம்
மாகியப்பிட்டி.

சட்டமும் சமுதாயமும்—8

தேசிய அரசுப் பேரவை எப்போது கலைக்கப்படும்?

தேசிய அரசுப் பேரவையைக் கூட்டவும், அதன் அமர்வினை நிறுத்திவைக்கவும் அதனைக் கலைத்துவிடவும் சனுதிபதிக்குத் தத்துவம் உண்டு என்று இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 21-ம் பிரிவு சொல்கிறது. இவ்வாறு ஏற்பாடு இருப்பதால் ஒவ்வொரு முறையும் இந்தப்பணிகளை அவர் விடாப்பிடியாகச் செய்துகொண்டிருப்பார் என்று எண்ணவேண்டியதில்லே. சனுதிபதியினுல் கலைக்கப்படாமலே, தேசியஅரசுப் பேரவை கலைந்துவிடுவதற்கும் அரசியலமைப்புச்சட்டத்தில் ஏற்பாடு உள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு தேசியஅரசுப்பேரவையும், (அதை முன்கூட்டியே சனுதிபதி கலைத்தாலொழிய) ஆறு ஆண்டுகள் கொண்ட ஒரு காலத்திற்குப் பதவியில் இருத்தல் வேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டத்தின் நாற்பதாம் பிரிவு கூறுகின்றது. அது அப்படிக் கூறுவதோடு நின்றுவிடவில்லே, ஆறு ஆண்டுகளுக்கு மேற்படப் பதவியிலிருத்தலாகாது என்றும் கூறுகின்றது. இவ்வாறு ஆறு ஆண்டுகளுக்கு மேற்படப் பதவியிலிருத்தலாகாது என்று கூறுவதும் திட்பநுட்பம் செறிந்ததாகாது என்று நினைத்தோஎன்னவோ, அரசியலமைப்பை யாத்தவர்கள் இன்னுமொரு வசனத்தையும் அந்த நாற்பதாம் பிரிவிலே அழுத்தம் திருத்தமாக எழுதிவைத்துள்ளார்கள். அதாவது அந்த ஆறு ஆண்டு காலம் முடிந்துபோதலாகிய நிகழ்வு, தேசியஅரசுப்பேரவையைக் கலைப்பதாகச் செயற்படுதல் வேண்டும் என்பதே அந்த வசனம். ஆகவே நாற்பதாம் பிரிவின்படி, சனுதிபதி தேசியஅரசுப்பேரவையைக் கலைக்காமலே அது கலைந்துவிடும். 42-ம் பிரிவின் (5ஆம்) உட்பிரிவிலும் இதையொத்த ஓர் ஏற்பாடு உள்ளது. 42(5)ம் பிரிவு இன்று பதவியிலிருக்கின்ற தேசியஅரசுப்பேரவை பற்றிப் பறைகின்றது. இன்றைய தேசிய அரசுப்பேரவை பற்றிய சட்ட ஏற்பாடானதால் அதனை இங்கே அப்படியே தருகின்றோம்.

''முதலாவது தேசியஅரசுப் பேரவையானது, முன்கூட்டியே கலைக்கப்பட்டால் ஒழிய, அரசியல்திருணய சபையானது, இந்த அரசியலமைப்பினை ஆக்கிக்கொள்கின்றதேதியிலே தொடங்குகின்ற ஐந்து ஆண்டுக்காலத்துக்குத் தொடர்ந்திருந்து வருதல்வேண்டும்''

எமது குடியரசின் அரசியலமைப்புச்சட்டம் 1972ஆம் ஆண்டு மேமாதம் 22-ம் தேதி ஆக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது எனவே மேற்படி சட்ட ஏற்பாட்டின்படி இப்போதுள்ள தேசிய அரசுப்பேரவையின் பதவிக்காலம் 1977ஆம் ஆண்டு மேமாதம் 22ஆம் திகதியோடு முடிவடைந்துவிடும். முடிவடைந்துவிடும் என்பதால் தேசிய அரசுப் பேரவையைச் சனுதிபதி கலைக்கவேண்டுவதில்லே. கலைக்காமலே அது கலைந்துவிடும். 1972ம் ஆண்டு மேமாதம் 22ஆம் தேதியிலிருந்து ஐந்துஆண்டுகள் கழிவதொன்றே தேசிய அரசுப்பேரவையைக் கலைப்பதாகச் செயற்படுதல்வேண்டும் என்ற சொற்கள் 42(5)ஆம் பிரிவிலே காணப்படாதபோதிலும் 1977ம் ஆண்டு மேமாதம் 22ஆம் தேதி தேசிய அரசுப் பேரவை தன்பாட்டிலேயே கலைந்துவிடும்.

செ. சிறீக்கந்தராசா

தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டதன்பின்னர் எந்த நேரத்திலாயினும் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலேமை வெளிப்படுத்தப்பட்டால் கலைக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவை கூட்டப்படலாமா? ஆம் என்கிறது அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடு. அவசரகால நிலேமையைப் பிரகடனம் செய்பவர் சனுதிபதி [பிரிவு 134(2)]. அவசரகால நிலேயைப்பிரகடனப்படுத்தும் பிரகடனம் தேசிய அரசப்பேரவை சீக்கிரம் குறிப்பிட்ட ஒரு தேதியில்கூடவேண்டும் என்று தேசிய அரசுப் பேரவையை அழைத்தல்வேண்டும். இந்தத் தேதியானது அவசரகால நிலேமை பிரகடனப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து மூன்றுநாட்கள்கடந்த பின்னர் வருகின்ற ஒரு கிட்டித் தேதியாக இருத்தல் வேண்டும் என்று அரசியலமைப்புஅறைந்துகூறுகின்றது அவசரகால நிலேமையைப் பிரகடனப்படுத்தும் பிரகடனத்தில் தேசிய அரசுப் பேரவை கூடவேண்டுமென்ற அழைப்போ, எப்போது கூடவேண்டும் என்ற விபரமோ குறிப்பிடப்படாவிட்டால் நிலேமை என்ன? என்று சிலர் சிந்திக்கக் கூடும் அதற்கும் அரசியலமைப்பு மறுமொழிசொல்கிறது தேசிய அரசுப் பேரவை கூடுவதற்கான தேதியொன்று அவசரகாலப் பிரகடனத்தில் குறிப்பிடப்படாதிருந்தால் அத்தகைய அவசரகாலப் பிரகடனமே அப்பிரகடனத்தேதியிலிருந்து பத்தாவது நாளன்று தேசிய அரசுப் பேரவை கூடவேண்டுமென்று தேசிய அரசுப் பேரவையை அழைப்பதாகச் செயற்படுதல்வேண்டும் என்று அரசியலமைப்புச்சட்டம் ஐயந்திரிபறக்கூறுகின்றது.

'மேலே சொல்லியவாறு அவசரகாலநிலேமையை முன்னிட்டு அழைக்கப்படும் தேசிய அரசுப் பேரவை எவ்வளவு காலத்திற்குப் பதவியில் இருக்கும் என்ற வினு எழலாம் இவ்வாறு கூடும் படிஅழைக்கப்பட்ட தேசியஅரசுப் பேரவை அவசரகாலம்முடிவுறுகின்றவரை அமர்வில்வைத்திருக்கப்படல்வேண்டும். அல்லது தேசிய அரசுப் பேரவைக்கான பொதுத்தேர்தல் முடியும்வரை அமர்வில் வைத்திருக்கப்படல்வேண்டும் அதாவது இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதுவரை அமர்வில் வைத்திருக்கப்படுதல்வேண்டும் பொதுத்தேர்தல் முன்னராக நடைபெற்றுல் அதுநடைபெற்று முடியும்வரை அமர்வில் வைத்திருக்கப்படுதல்வேண்டும் அவசரகாலநிலே முன்னராக முடிவுற்றுல் அது முடிவுறும்வரை அமர்வில் வைத்திருக்கப்படுதல்வேண்டும்.

அப்படியானுல் அவசரகால நிலே காலவரையின்றி அமுலில் இருக்கமுடியுமா? அவசரகால நிலேயின்கீழ் தேர்தலே நடத்தமுடியுமா? என்ற கேள்விகள் எழுகின்றன. அவற்றுக்கான விடையைப் பொருத்தமான சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

சட்டத்தின் செயற்பாட்டினுல் தேசிய அரசுப் பேரவை கலைத்துவிடுதல் பற்றி இதுவரை பார்த்தோம். எத்தகைய சூழ்நிலேகளில் சனுதிபதிதேசிய அரசுப் பேரவையைக் கலைக்கமுடியும் என்பதை இனிக்காண்போம்.

'தி.மு.க அழிந்தால் நடிகர் கட்சியும் இருக்காது'

சென்னே, மார்ச் 15

''நாம் ஜனநாயகத்திற்காகப் போராடுகிறோம். இந்தப் போராட்டத்தில் நாம் தோற்போமானுல் எங்கள் எதிர்க் கட்சிக்காரர்கள்கூட ஒரிரு மாதங்கள்தான் வாழலாம்; பிறகு அவர்களும் வாழமுடியாது'' என்று தி.மு.க. தலேவர் கலேஞர் மு. கருணுநிதிகூறினர்

கடந்த வருடம் தி. மு. க. வை அழிக்கச் சூழ்ச்சி நடந்தது. அந்தச் சூழ்ச்சியில் அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் நடிகர்கட்சிகூட இன்று இருந்திருக்கமாட்டாது என்றும் கருணுநிதி கூறினர்.

மத்திய நிதியமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம், அண்மையில் 50—க்கு மேற்பட்ட முதலாளிகளே சென்னே கவர்னர் மாளிகையில் சந்தித்து அவர்களிடம் தேர்தலுக்கு நிதி கேட்டிருந்தார் என்றும் கருணுநிதி குற்றம் சாட்டினர். (இ)

கருணுநிதிக்கு கல்வீச்சு

சென்னே, மார்ச் 15

தி. மு. க. தலேவர் கலேஞர் மு. கருணுநிதி மாற்றுக் கட்சியினரின் கல்வீச்சுக்கு இலக்கானர்.

இதனே அவரே கூறியுள்ளார்.

''பெரியகுளம் தொகுதியில் உள்ள ராசிங்கபுரம் என்ற ஊரில் என் தோள்பட்டை மீது கூட கல்லால் அடித்து விட்டார்கள். தாங்கள் யார் என்பதை மக்களுக்கு அவர்களே உணர்த்திக் சொள்கிறார்கள்'' என்று கலேஞர் கூறியிருக்கிறார். (உ—இ)

கட்டடவேலேகள் துரிதம்

வவுணதீவு, செவ்.

ஈச்சந்தீவு கிராமசபையின் பொதுநூல்நிலேயம், பாலர் பாடசாலேக் கட்டடவேலேகள் துரிதமடைந்துள்ளன. இக் கட்டிடவேலேகள் இம் மாத இறுதிக்குள் பூர்த்தியாக்கப் பட்டுவிடுமென்றும், அடுத்த மாத நடுப்பகுதியில் மேற்படி கட்டடத் திறப்புவைபவம் நடைபெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

பாராட்டு

வவுணதீவு, செவ்.

அகிலஇலங்கை காந்திசேவா சங்கத்தின் மட்டக்களப்புப் பிரதேசக் கிளேயின் தலேவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள மட்டக்களப்பு முன்னுள் மாநகராட்சிமன்ற உறுப்பினர் திரு. பி. ரி. அரசனுக்கு வவுணதீவுகிராமமுன்னேற்றச் சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது. மேற்படி சங்கத்தின் சார்பில் அதன செயலாளர் இப் பாராட்டுதலே அனுப்பிவைத்துள்ளார். (உ)

"ஓடு ஏந்தும் நிலைமாறும்; நட்புடன் வாழும் நாளும் வரும்"

எல்லா இனங்களிலும் சிறுக்கர்கள் இருப்பதுபோல, நம் இனத்திலும் சிறுக்கர்கள் உண்டு. அவர்களை எல்லாம் புறக்கணித்து, தமிழினத்தையே தனிநாடு நோக்கி ஏறுபோல் வீறு நடையிடச்செய்வது தமிழர் கட்சிகள் அனைத்தினதும் கடமை. அரசியல் கொள்கைகளில் மாறுபாடுகளும் வேறுபாடுகளும் இருப்பினும், இக்கொள்கையில் ஒருமுகப்பாடு இன்றியமையாதது.

"ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர் உதையப்பராய் விட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவர்" —இதுதான் பாரதிதாசன் தமிழர்க்கு முரசறைந்தது. இது இன்றைய தமிழ் இளைஞர்களின் காதுகளில் ஒலித்து, உள்ளங்களை உணர்வுறுத்திச் செயல் ஊக்கத்தை அளித்திருப்பது மகிழ்தற்குரியது. பாரதி பழித்ததுபோல 'பாமரராய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு, நாமமது தமிழரென கொண்டு" மட்டும் வாழலாமோ? பெயரிலே மட்டுமன்றி இனத்திலே தமிழராய்-மொழியிலே தமிழராய் வாழ அடிப்படை நாட்டிலேயும் தமிழராய் வாழ்வதே.

விவாதமேடை

வரலாறுகள் சும்மா இருப்பதால்-அடங்கி ஆமையாய் இருப்பதால் உருவாவதில்லை. இனங்களின் உணர்வு, எழுச்சி, தன்மானம் என்பன வரலாறுகளாய்ச் சமைந்துள்ளன. எம் கண்ணெதிரில் பங்களாதேஷ் போன்ற நாடுகளும் வலிமிக்க கொலையினங்களிடம் இருந்து விடுதலைபெற்றமைகண்டோம். அங்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றியிருப்பதாக கழுகுக் கண்ணர்கள் கரித்துக் கொட்டுகிறார்கள். ஒன்று சொல்வோம்-நன்று புகல்வோம்-பொருளாதார - அரசியல் பிரச்சினைகள் நாடு ஒன்றாய் இருப்பினும், பிரிந்து இருப்பினும் சூழ்நிலைகட்கு ஏற்க எழக்கூடியவை. அவற்றைக் காட்டிப் பிரிவினையை எதிர்ப்பது மதியீனம். இதற்காக மாற்றருடன் ஒண்டிக் கொல்லும் நடிப்புச் சதேசி குடித்தனம் பண்ணுவதை ஞாயிற்றை விற்று மினுமினி கொள்வதோடு ஒக்கும். பொருளாதார-அரசியல் பிரச்சினைகளை முன்கூட்டியே எதிர்பார்த்து வரலாறுகள்-நாடுகள் உருவாவதில்லை. அவற்றின் பின் விளைவுகள்தான் வரலாறு. அவை இல்லாமலும் வரலாறு இல்லை.

ஈழம் பிரிந்து நிற்கப் பொருளாதார அடிப்படை உள்ளதா என்ற சந்தேக வியாதி வேறு இருக்கிறது. நாடுகள் பிரிவதும் கூடுவதும் பொருளாதார ரீதிகளை அளந்து அல்ல. இன உணர்வுகள்-புரட்சிகள் அவற்றைச் சிந்திப்பதில்லை. வேண்டுமானால் பொருளாதார முறிவு புரட்சிக்கு வித்தாகலாம். எங்கும் இனங்களின் வாழ்வும் தாழ்வுமே பிரச்சினைகள். பொருளாதார சிந்தனைகளைத் தூண்டி விளக்குகிறார்.

> ['வள்ளல்' எழுதிய முதல் கட்டுரை கடந்த 'சனி' யன்று வெளிவந்தது. அதன் இரண்டாம் பகுதியை இன்று தருகின்றோம். ஆ-ர்]

ஒழிய-முதலாக அல்ல. பொருளாதாரம் உருவாகாத-அதை உருவாக்கமுடியாத இடமே கிடையாது-பாலை நிலத்தையும் உறைபனி நிலத்தையும் தவிர. பொருளாதார வளங்களை முன்கூட்டியே அளந்து தயங்கியிருந்தால் இன்று இஸ்ரேல், மாலைதீவு மேலும் பல நாடுகள் உருவாகியே இருக்க முடியாது. நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமின்றி வஞ்சனை சொல்லும் நடிப்புச் சதேசிகளுக்கு நாடு-இனம்-மொழி பற்றி அக்கறை-ஆவல் கிடையாது. ஆகவே அவர்கள் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதும் பயனற்ற விடயம். வெள்ளையரிடம் இருந்து சுதந்திரம் பெற்று, இறுதியில் சிங்களக் காலனி ஆட்சிக்கு அடிமைப் பட்டுவிட்டோம். எமது ஈழம் இன்று காலனிநாடு தான். வெள்ளையர் இருந்த காலத்திலேயே அவர்கள் போனால் பொருளாதாரம் போகும்-தம் சலுகைகள் போகும் என்று சுதந்திரத் திற்கு முட்டுக்கட்டை போட்டவர்களும் இருந்தார்கள் தாம். ஈழம் கோருவது பிரிவினை என்று கூடக் கருதவேண்டாம்-அந்த நாட்டை மீட்கும் பணியாகவே நினைப்பது நலம். சுகந்திரதேவியைத் துதித்து, பாரதி சுதந்திரமில்லா நாட்டை-

நின்னருள் பெற்றிலாதார்
நிகரிலாச் செல்வரேனும்
பன்னரும் கல்விகேள்வி
படைத்தயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை
பாழாம்
அணிகள்வேய் பிணத்தோடொப்பர்

என்று.

கல்விக்குத் உடை, வேலைக்குக் கைவிரிப்பு, நிலத்துக்கு மறுப்பு, சிங்களவர் குடியேற்றம் என உயிர் ஊற்றிலேயே கைவைக்கும்போது அலறிப் புடைக்கிறோமே! இந்த இழிநிலை மாற நம்மை நாமன்றோ ஆளவேண்டும். இவையாவற்றையும் இவ்வளவு காலமும் நாம் உணராதது-உணர வைக்காதது எம் இனத்தின் அடிப்படைக் குறை. காரணம் நாம் புறநானூற்றில் தீளைப்பதில்லை -அகநானூற்றில் அமிழ்வதில்லை-குறளிலே குவிப்பதில்லை-நம் பெருமை நமக்கே தெரிவதில்லை. கடைசியாக நம் தமிழ்த் தலைவர்கள் தமிழ் கற்றவர்கள் பேச்சிலிருந்தாவது உணரவேண்டாமா?

சில தமிழ்ப் பகுதியினர் சிங்களவராக மாறினர்-மாறி வருகின்றனர். தமிழ்ப் பகுதிகள் சிங்கள மயமாக்கப்படுகின்றன. ஐயகோ-தமிழ் செய்த தவறுதான் யாதோ! "இருந்தமிழே! நீ இருந்தால் விண்ணோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்று புலவர் பாராட்டிய பைந்தமிழ் படும் பாடுதான் பார்க்கிலோமோ."

பிரிவினைக்கு அஞ்சுவோர் கொழும்பு போன்ற மாநகர்களில் பணமும் செல்வாக்கும் குவித்து வைத்திருப்போர்தான். அந்தச் சிறு தொகையினருக்காகத் தமிழ் நிலம் வாழ் பெருந்தொகைத் தமிழ் மக்களைப் பலியிடலாமா? ஒரு சில செல்வாக்குள்ள தமிழர்களின் பிள்ளைகளுக்கு வசதிகள் கிடைக்கிறதே என்ற காரணத்திற்காகச் சேர்ந்து இருந்தால் அது குறுகிய நோக்கே! நம் நிலத்தில் பணம் கொட்டி முதலீடுசெய்ய வழி இல்லாமல் இல்லை. அதற்குக் கொழும்பு அரசிடம் அனுமதி வேண்டும். அந்த அரசாகொடுக்கும்! எங்காவது சிங்களப் பகுதியில் நிறுவச்செய்து சிங்களவர்க்கு வேலை கொடுக்கச் செய்யும். நம் தமிழ்ப் பகுதிகளில் தமிழர் முதலீடு செய்யமுடியாதநிலை. நமக்குத் தொழில் வாய்ப்பும் தர இயலாதநிலை எல்லாவற்றுக்கும் சிங்களஅரசிடம் வரவேண்டும்.

தனிநாடு பெற்றிடின் இனி ஓடு ஏந்தும் நிலைதான் ஏது? தயங்காமல்-வலைகளில் மயங்காமல்தமிழன் தாணியாளும் வரலாறு காணவேண்டும். அன்று சிங்களவருடனும் யாவருடனும் நட்புணர்வுடன் வாழும் நாள் வரும். ஒத்துழைத்து உதவிகள் நல்கும் நாள் வரும்.

"வள்ளல்"

பார்வையிழந்தவர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம்

யாழ். சமூகசேவைப்பகுதி நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்
யாழ். மாவட்டத்தில் கண்
பார்வை இழந்தவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்குமுகமாக திட்டம் ஒன்று யாழ். சமூக சேவைகள் பகுதியினரால் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இத் திட்டத்தின் கீழ் கல்வியில் ஆர்வமுடையவர்கள் தொடர்ந்து கல்விகற்பதற்கும்தொழில் புரியக் கூடியவர்கள் தகுந்த தொழிற் பயிற்சியில் வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

யாழ். மாவட்டத்திலுள்ள கண்பார்வை இழந்தவர்கள் பற்றிய விபரங்களைச் சேகரித்து அனுப்பும்படி பிரதேச உதவி அரசாங்க அதிபர்கள் கேட்கப் பட்டுள்ளனர்.

கண்பார்வை இழந்தவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு எவ்வளவு விரைவில் வேண்டிய விபரங்களை அனுப்புகின்றார்களோ அவ்வளவு விரைவில் புனர் வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என சமூக சேவைகள் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடமுழுக்குப் பெருவிழா

நெடுந்தீவு, செவ்.

நெடுந்தீவுமேற்கு நெழுவினி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன. அடுத்த மாதம் 4-ம் திகதி திருக்குடத் திருமுழுக்குப் பெருவிழா ஆரம்பமாகவுள்ளது. 40 தினங்கள் நடைபெறும் பெருவிழாவின்போது சமயச் சொற்பொழிவுகளும், இசை நிகழ்ச்சிகளும் தினசரி இடம் பெறும். (அ)

பரிசளிப்பு விழா

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வை சிதம்பராக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் கட்டிடத்திறப்பு விழாவும் கல்லூரி திறந்தவெளியரங்கில் அண்மையில் நடைபெற்றது.

பருத்தித்துறை ஏம். பி. திரு.க. துரைரத்தினம் பிரதம பேச்சாளராகக்கலந்து கொண்டு உரையாற்றினார். கல்வி அதிகாரி திரு. சிவபாதமும் பாரியாரும் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டனர்.

பாடசாலை அறிக்கையை அதிபர் திரு. செல்வவிநாயகம் சமர்ப்பித்து வைத்துப் பேசினர்.

வட்டாரக்கல்விஅதிகாரி திரு. துரைசாமி மலரைவெளியிட்டு வைத்தார்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. உடுப்பிட்டியூர் யோகனின் 'கறுப்பும் வெள்ளையும்' என்ற நாடகமும் நடைபெற்றது.

கோண்டாவில்

கொலைமுயற்சி வழக்கில் எதிரிக்கு 4 வருடம்

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 4 வருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப் பட்டது.

இவ்வழக்கில் கந்தையா துரைராஜா என்பவர் சூசை உடையார் சவரிமுத்து என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி கனக மனோகரன் ஆஜராகினார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினர்.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை தொடர்ந்து நீதிபதி 4 வருடகடுழியசிறைத் தண்டனை விதித்தார்.

எதிரி மற்றொரு வழக்கில் ஒருவருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை பெற்றிருந்தார். அந்தத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (க-ஆ)

"தமிழ்ப்பகுதிகளில்

சிங்களக் குடியேற்றம் அதிகரித்து வருகிறது"

— மங்கையர்க்கரசி

ஊரெழு, செவ்

"இப்பொழுது தமிழ்ப்பகுதிகள் எங்கும் சிங்களக்குடியேற்றம் அதிகரித்துவருகிறது. தமிழர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதே இன்றைய ஆட்சியின் நோக்கமாகும். காலப்போக்கில் தமிழினம் என்றஒரு இனமேஇல்லைஎன்று சொல்லக்கூடியதாக இன்றைய ஆட்சியாளர்கள் செய்துவருகிறார்கள்."

ஊரெழு பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய திருமதி மங்கையர்க்கரசிஅமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு.சு.சபாரத்தினம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர் திரு.அ. அமிர்தலிங்கம் பேசும்போது கூறியதாவது: "எதிர்வரும் பொதுத்தேர்தலில், தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் ஈழம் என்ற இலட்சியத்தை வைத்துவாக்குக்கேட்கப்போகிறது. நீங்கள் அளிக்கும் வாக்கு தமிழ் ஈழத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கவேண்டும்."

கோப்பாய் எம்.பி.திரு.சி. கதிரவேலுப்பிள்ளை, பருத்தித்துறை எம்.பி.திரு துரைரத்தினம், தமிழ் இளைஞர்பேரவையைச் சேர்ந்த திரு.பொ. சத்தியசீலன் உட்பட பலர் உரையாற்றினர்கள். (க)

பாஸ்போட்டுகளை இலகுவில்பெற வாய்ப்பு

கொழும்பு, திங்கள்

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர் 'பாஸ்போட்' டுகளை இலகுவில் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

'பாஸ்போட்' பெறுவதற்குவழங்கப்படும் பிணைப் பணம் 5 ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது வரை (இப்பிணைப்பணம் 10 ஆயிரம்) ரூபாவாக இருந்தது தெரிந்ததே.

இனிமேல் வருடாந்தம் 7 ஆயிரம் ரூபா சம்பளம் பெறுபவர்களும் பாஸ்போட் எடுப்பதற்குப் பிணை நிற்கலாம் என்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். (இ)

தெரிவு

சுன்னாகம், செவ்வாய்

சுன்னாகம் பட்டின சபையின் புதிய உபதலைவராக திரு.இராமலிங்கம் இராசதுரை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொதுச் சேவைகளில் ஆர்வமுள்ள இவர், 9 வருட காலஎல்லையையும் தாண்டி செயற்பட்டு வரும் இச்சபையில் முன்பும் 4 வருடங்கள் உபதலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்லயன் களியாட்டு விழா-77

போட்டிகளில் கலந்து கொள்பவர்களின் விபரம்

யாழ். லயன் களியாட்டு விழாவை யொட்டி இம்மாதம் 20-ம் திகதி நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்குபற்ற விருப்பவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

இப்போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பும் கடைசி திகதி 16-3-77 ஆகும். ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும் கூப்பனிலேயே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

'யாழ். லயன் களியாட்டு விழா 77' விளையாட்டு போட்டிகளுக்கான விண்ணப்ப கூப்பன் ஈழநாடு பத்திரிகையில் 2-ம் பக்கத்திலும், நிகழ்ச்சிகள் விபரம் 7-ம் பக்கத்திலும் இடம் பெற்றுள்ளன. (க)

சைக்கிள் ஓட்டப் போட்டி

90 மைல்மரதன்போட்டி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம்வரை

ஜி.ஏ.யோகேஸ்வரன்,மே/பா. ஜே.கிறகரி,சில்லாலை பண்டத்தரிப்பு. பெ. ஒகஸ்ரீன், 213 சிவசுந்தரம் வீதி வட்டக்கச்சி. நா. செல்வரத்தினம், பூமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். அ. சத்தியகாந்தி, 39 B நகரசபை இல்லம், மன்னார் வீதி வவுனியா. பி. பெரியண்ணன்,மே பா. ஏ. எஸ். காந்தி 39 B நகரசபை இல்லம் வவுனியா. வி.சுமதிபாலன், மூன்று முறிப்பு, வவுனியா. எஸ். மாசிலாமணி, 23/4 சென்றல் ஈஸ்ட்ரோட் குருநகர் யாழ்ப்பாணம். அ. பீற்றப்போல். 30 இராசேந்திரா வீதி யாழ்ப்பாணம். எஸ். ஜெயராசா, வாரிக்குட்டியூர், வவுனியா. சு. தருமராசா, வாரிக்குட்டியூர், வவுனியா. செ. சத்தியநாதன், குடியிருப்பு,வவுனியா. கே. எல். ஏ. ஞானதாசா, அரசினர் பண்ணை வவுனியா. சி. சந்திரகுமார், குரும்பசிட்டி ஆஸ்பத்திரி, தெல்லிப்பழை. வ. மகாலிங்கம், பாலக்காடு, வசாவிளான். எம். கே. எம். முருகதாசன், மதகுவைத்த குளம், மூன்று முறிப்பு வவுனியா. இ. உதயகுமா 10,3-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். என். குமாரவேல் 158 நாவலர் வீதி யாழ்ப்பாணம். க. சிவராசா, 'அன்னை இல்லம்' எல்லப்பா மருதங்குளம், வவுனியா. ஏ. ஜி. கொன்ஸ்ரன்ரைன் குருநகர் சனசமூக நிலையம் யாழ்ப்பாணம். செந். கோணர்சாமி ஐயா, வாரிக்குட்டியூர், பாவற்குளம், இரத்தினம் அரியராசா 529, வாரிக்குட்டியூர். ப.செல்வராசா, கோயில் புதுக்குளம், இல. 60, 5-ம் ஒழுங்கை வவுனியா. க. குணராசா, கட்டுவன்தெற்கு, பிள்ளையார்கோவிலடி தெல்லிப்பளை. வே. செல்வராசா அரசினர் பண்ணை வவுனியா. கே. செல்வராசா மாவிட்டபுரம் பளை, தெல்லிப்பளை. ஐ. செல்வராஜா, மயிலணி, வடக்கு, சுன்னாகம். ஜே. யேசுதாசன், 12, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம். து. வரதராசா, நவாலி வடக்கு, மானிப்பாய். ஜோசப் கோபாலக்கிருஷ்ணன், குடியிருப்பு, வவுனியா. அ. தங்கராசா, 151,பீச்ரோட், பாஷையூர், யாழ்ப்பாணம். எஸ். பி. இராஜதுரை, புத்தூர் கிழக்கு, புத்தூர். பி. செல்வராஜா, மே/பா. பி. இராமசுவாமி,ஜோதிடெக்ஸ்டைல்ஸ் வவுனியா, எஸ். லோகநாதன், தச்சங்குளம், வவுனியா. நா. கணநாதன் 4A, U.C. குவாட்டஸ், வவுனியா. க. யோகரத்தினம், 644, 6-ம் யூனிட், வாரிக்குட்டியூர். தா. கமலதாசன், 21B, U. C. குவாட்டஸ், மன்னார் வீதி, வவுனியா. சி. சந்திரசேகரம், குரும்பசிட்டி, ஆஸ்பத்திரியடி, தெல்லிப்பளை. பொ. கேசவமூர்த்தி, பிரதானவீதி, நயினாதீவு-2. க. விஜயகுமார், கச்சாய்ரோட், சாவகச்சேரி. தி. கந்தசாமி, சப்பச்சிமாவடி, சாவகச்சேரி. ஏ. ஜி. கொன்சன்ரையின், இல. 14, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். எஸ். எச். நஜீப், 124, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். நா. மகேந்திரன், ஐக்கியவிளையாட்டுக் கழகம், அரியாலை. ஆர். சதாசிவம், கிருஷ்ணராஜ் பிடவைக் கடை, நம்: 40, பஜார்வீதி, வவுனியா. தி. யுகராசன், தபாலகம், வவுனியா. சி. கனகசிங்கம், நொச்சிமோட்டை, ஓமந்தை, செ. ஜீவரெட்னம், கோயில்குளம், வவுனியா.

25 மைல் சைக்கிள் ஓட்டம்

க. தயாபரன், மூளாய், சுளிபுரம். அ. பிறேம்சந், 628, கண்டிரோட், அரியாலை. ரீ. உதயசிங்கர், 'சோமாஸ்கந்தவாசா',கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசெட்டி பருத்தித்துறை. வெ. மதுரநாயகம் 70 ஓல்ட் பாக்ரோட் கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். து. ஞானச்சந்திரன் இல: 3 மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம். சி. மனோகரன் வெளிவட்ட வீதி நம்:18 வவுனியா. வின்ஸ்ரன் சேச்சில் ஜான்ஸ் சீமெந்துத் தொழிற்சாலை இரணைக்குடிசை இல: F 5 காங்கேசன்துறை. பா. வின்சென்ற் 165 கடற்கரை வீதி பாஷையூர் யாழ்ப்பாணம். த செல்வசலமன் ஈவினை புத்தூர்ரோட் சுன்னாகம். எஸ் ஏ யோண்சன் குருநகர் சனசமூக நிலையம் யாழ்ப்பாணம் வே செல்வராசா செல்வசக்திமில் வவுனியா அ பீற்றப்போல் 30 இராசேந்திரா வீதி யாழ்ப்பாணம். வ மகாலிங்கம் வயாவிளான் பாலக்காடு. சதாசிவம் 51/1 இராசாவின்தோட்டம் யாழ்ப்பாணம். வை பாலமுருகநாதன் கட்டுவன் தெல்லிப்பளை. ஆர் இரவீந்திரகுமார் 75 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் அ தேவதாஸ் நம் 70 ஓல்பாக் ரோட் கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம் கா சிவக்குமார் 52 நாயன்மார் வீதி நல்லூர் யாழ்ப்பாணம். பா பிரதீபன் கல்வியங்காடு யாழ்ப்பாணம் எல் இம்மனுவேல் இல: 3 அடப்பன்ரோட் 2ம் ஒழுங்கை குருநகர் யாழ்ப்பாணம். எஸ் ஏ யோண்சன் 30 2ம் குறுக்குத்தெரு குருநகர் யாழ்ப்பாணம். ச ஞானலிங்கம் உடுவில் கிழக்கு சுன்னாகம்.

5 மைல் பெண்கள் சைக்கிள் ஓட்டம்

சி. பரமேஸ்வரி, 34, யாழ். ரோட், யாழ்ப்பாணம். ஞா. சாந்தி, 'சாந்தி நிகேதன்' வளாக வீதி, யாழ்ப்பாணம். செ. சுகுமாரி, 11/10,பொலிஸ் குவாட்டஸ், பண்ணை, யாழ்ப்பாணம். சி. சந்திராதேவி, 176, இராமலிங்கம்ரோட், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். சி. கிரிஷாதேவி 176 இராமலிங்கம் ரோட் திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். ஈனிற் இவோன் ஜான்ஸ் சீமெந்துத் தொழிற்சாலை, இரணைக்குடிசை இல.F5, காங்கேசன்துறை. க. சுகுணநாயகி, தபாற்கந்தோர் அருகாமை, மானிப்பாய். மெ. சாந்தி, மே/பா. தியாகலிங்கம், இல. 10, ரெயில்வே குவாட்டஸ், காங்கேசன்துறை. க. நாகேஸ்வரி, தபாற் கந்தோர் அருகாமை, மானிப்பாய். சி. லக்கி, இராசவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். த. மஞ்சுளா, மானிப்பாய் தெற்கு மானிப்பாய். அ. லூசியா, பண்ணை பொலிஸ்குவாட்டஸ், யாழ்ப்பாணம். பா. கிருபாலினி, 645. கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம், க. வசந்தகுமாரி, துன்னாலை வடக்கு: கரவெட்டி. சி. கலா, இராசவீதி, கோப்பாய்தெற்கு, கோப்பாய். ஜேன்மற்றலின் மாட்டீன், No. F 5, இரணைக்குடிசை, சீமெந்துத்தொழிற்சாலை, காங்கேசன்துறை. மேரி மாகிறேற் ஜேம்ஸ், இல. 30, பாக் ரோட், யாழ்ப்பாணம். க. சாந்தகுமாரி, துன்னாலை வடக்கு, கரவெட்டி.

26 மைல் மரதன் வீதியோட்டம்

எம். வி. சந்திரசிங்கம் குமாரன் டூறிஸ்ட் இன் இல. 67 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். கே. கந்தசாமி முத்துமாரி அம்மன் கோவிலடி மட்டுவில் வடக்கு சாவகச்சேரி. இ. ராசேந்திரம் கீரிமலை ரோட் பண்டத்தரிப்பு. இ. தியாகராசா கீரிமலை ரோட் பண்டத்தரிப்பு. வ. திருவாதவூரர் பன்னாலை தெல்லிப்பளை. நா. தங்கராசா நவாலி தெற்கு மானிப்பாய். ஏ. ஏ. வரதகுமாரன் சில்லாலை பண்டத்தரிப்பு. ம. சுந்தரலிங்கம் பத்தானை அளவெட்டி வடக்கு அளவெட்டி. ப. புவனேந்திரன் 28/14 மணல்தறை லேன் கந்தர்மடம் யாழ்ப்பாணம். சா. தவயோகராஜா வேலணை மேற்கு வேலணை. எஸ். கே. தர்மகுலசிங்கம் 6 சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம். இ. கிறிஸ்பின் இல. 4 கொழும்புத்துறை யாழ்ப்பாணம். இ. திருநாவுக்கரசு கீரிமலை ரோட் பண்டத்தரிப்பு. ச. இந்திரகுமாரன் 13 கலைப்புலவர் வீதி யாழ்ப்பாணம். வே. வெள்ளிநாதன் முல்லைத்தீவு ரோட் 5ம் குறுக்குத் தெரு பரந்தன். து. பாலச்சந்திரன் 3 மணிக்கூட்டுவீதி ஒழுங்கை யாழ்ப்பாணம். சி. திருச்செல்வம் யாழ். உலோகத் தொழிற்சாலை 250 254 காங்கேசன்துறை. ம. ஜெயராசா சில்லாலை பண்டத்தரிப்பு. த. திருநாவுக்கரசு 432/2 மடம் வீதி யாழ்ப்பாணம். ஏ லோறன்ஸ் 31/8 சலமன்லேன் கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். ஞா. ரவீந்திரன் அக்கரை தொண்டைமனாறு. வி. விக்கினேஸ்வரன் அக்கரை தொண்டைமனாறு.

சிறுவர் விநோத உடைப் போட்டி

நாகேஸ் ஸ்ரீசங்கர், 18, நடுத்தெருலேன், யாழ்ப்பாணம். ந. சிவபாதம், மீசாலை தெற்கு, வாகையடி, மீசாலை. ஞா. லிங்கேஸ்வரன், ''சாந்தி நிகேதன்'', வளாக வீதி, யாழ்ப்பாணம். சு. செல்வராசா, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. சு. ஜெகநாதன், றூபி போட்டோ, 10, 14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். உமாகாந் குணரத்தினம், 33, கத்தீற்றல் ரோட், யாழ்ப்பாணம். சி. ப. சசிஹரன், 'செல்வஜோதி' அல்வாய். த. வக்சலா, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். சு. கலாராணி, கச்சேரி-நல்லூர் ரோட், 54/9, குரோசெற்லேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

ஆணழகன் போட்டி

கே. என். ராஜன் றிட்ஸ் ரெசிலிங் கிளப் 56, ஜெயந்திநகர், கிளிநொச்சி. என். ஜெயம் றிட்ஸ் ரெசிலிங் கிளப், 56, ஜெயந்திநகர், கிளிநொச்சி. சோ. சிறீகந்தலிங்கம் மாவட்ட நீதி மன்றம் பருத்தித்துறை. பொ. ரதிமோகன் சந்தை மேற்கு ஒழுங்கை பருத்தித்துறை. சி. தேவதாஸ் ஏழாலை மேற்கு ஏழாலை. கி. சிவத்தம்பி நம். 37 சின்னாவளை பொலிகண்டி வல்வெட்டித்துறை. ஐ. நடராஜா சேர்ச்லேன் மல்லாகம். எஸ். பி. கெங்காபரம் செட்டித்தெரு சரசாலை சாவகச்சேரி. வ. நா. இராமச்சந்திரா இல. 137 வட்டக்கச்சி கிளிநொச்சி. மா. யோகலிங்கம் மே/பா கே. எஸ். லிங்கம் வி. மு. வீதி பருத்தித்துறை. கே. எஸ். லிங்கம் வி. மு. வீதி பருத்தித்துறை. ஐ. நடராஜா இளந்தென்றல் மன்றம் சுன்னாகம். ச. இம்மனுவல் குருநகர் ச. ச. நிலையம்.

நீச்சல் போட்டி

யெ.எட்வின்வெற்றிலைக்கேணி முள்ளியான் எம்.சிலுவைதாஸ் 15/4 பாஷையூர் 3ம் தெரு ஒழுங்கை யாழ்ப்பாணம். நா. அருமைச்சந்திரன் வல்வெட்டித்துறை. மா. விக்கிரமன் காங்கேசன்துறை வீதி கோண்டாவில். பி. பாக்கியராசா வெற்றிலைக்கேணி முள்ளியான். ஆ. தேவதாஸ் சென் அன்ரனிஸ் காட்டு வளவு பாஷையூர். அ. அலெக்சாண்டர் 19 புதுக்குடியிருப்பு பாஷையூர். யே. நெல்சன் 19 புதுக்குடியிருப்பு பாஷையூர். ச. யோகராசா பாலத்தடி தொண்டமனாறு. ரோ. பிரான்சீஸ் வெற்றிலைக்கேணி முள்ளியான். யெ. எட்வின் வெற்றிலைக்கேணி முள்ளியான்.



சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்று வில்லுப்பாட்டுப் பிரதியை மில்க்வைற் தொழிலதிபர், வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையில் வெளியிட்டு வைக்கிறார். கொத்தமங்கலம் சுப்பு பாடிய இப்பாடல் தொகுதியை இராமகிருஷ்ண மண்டபத்தின் கட்டட நிதிக்காக மில்க்வைற் அச்சிட்டு உதவியது.

எச்.என்.ஸி.ஈ.மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

கொழும்பு, செவ்

அடுத்த வருடம் முதல் தடவையாக நடைபெற உள்ள எச். என். சி. ஈ. பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர் வரும் ஜூலை மாதம் நடைபெறும் இந்தமுன்னோடிப் பரீட்சை பாடசாலைகளிலேயே நடைபெறும்.

இதற்கான கேள்விப்பத்திரங்களை பரீட்சைத் திணைக்களம் தயாரித்து பாடசாலைகளுக்கு அனுப்பும்.

இத்தகவல்களை பரீட்சை ஆணையாளர் திரு. இரத்நாயக்கா தெரிவித்தார். (இ)

''ஆரம்பக் கல்வியினால்

ஆசிரியர்களுக்கும் நல்ல எதிர்காலம் உண்டு''

இமையாணன், செவ்

''ஆரம்பக் கல்வி கற்பிப்பது மிகவும் சிறந்தபணி. ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இதனால் நல்ல எதிர்காலம் அமையும்''.

இவ்வாறு ஆசிரியர் பயிற்சிக்கல்விப் பணிப்பாளர் ஜனாப் முகம்மது உவைஸ் அகமட் நேற்று கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலைக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் மேற்கொண்டபோது கூறினார்.

பாரியாருடன் விஜயம் செய்த அவருக்கு மேற்படி கல்லூரியின் அதிபரும் விரிவுரையாளர்களும், ஆசிரிய மாணவர்களும் மதிய போசனம்அளித்துக்கௌரவித்தனர்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'விரிவுரையாளர்கள் இதுவரை காலம் எழுதிய குறிப்புக்களை எரிக்கவேண்டிய கட்டம் வரும். அவர்கள் புதிய புதியகுறிப்புக்களைத் தயாரிக்க வேண்டும்.' தொழில் முன்னிலைப்பாட ஆசிரியர்கள் இதற்கு முன் தரக்குறைவாக மதிக்கப்பட்டனர். ஆசிரியர்கள் எந்த நெறிப்பயிற்சியைப் பின்பற்றினாலும் அவர்கள் இரண்டு தொழில் முன்னிலைப் பாடங்களைக் கற்கவேண்டும்''

விரிவுரையாளர் தங்கத்துரை பேசுகையில், தொழில் முன்னிலைப் பாடத்திற்குஅத்திபாரம் இடப்பட்டவர்கள் இன்று மனச் சஞ்சலத்துடன் இருக்கிறார்கள்என்று கூறினார். மற்றும் அதிபர் உட்பட பலரும் உரை நிகழ்த்தினார்கள்.

ஆசிரியர் கல்விப் பணிப்பாளர் மேற்படி கல்லூரியின் சுற்றுமதிலுக்கான அத்திபாரக் கல்லையும் நாட்டினார் அன்று மாலையில் நடைபெற்ற விசேட கலைநிகழ்ச்சிகளில் நாடகங்கள்,காவடி ஆட்டம், நடனம் முதலியன இடம் பெற்றன. (இ)

புத்தக உதவி

நெடுந்தீவு,செவ்.

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் தீர்மானித்தபடி இம்மாதப் பிற்பகுதியில் வசதிகுறைந்த பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தங்களை வழங்குமெனக் கழகத் தலைவர் திரு. நா.இராமச்சந்திரன் தெரிவித்தார். (உ)

புதிய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது இந்தி எதிர்ப்புப் பற்றிப்பேச என்ன யோக்கியதை இருக்கிறது?

''நாளைக்கு இந்தித் திணிப்பு வந்தால் அதை எதிர்க்கக் கூடிய படை நமதுபடைதான்; அவர் அல்ல, தெரியும் அவருடைய வீரம் நமக்கு.'' (உ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
நாகேஷ்—சௌகார் ஜானகி
நீர்க்குமிழி

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-பத்மினி
ராணி சம்யுக்தா

2nd CROWDED WEEK
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
2வது வாரமாகத்
தொடர்ந்து காண்பிக்கப்படுகிறது
நீகல் தினசரி 4-45, 7-00 & 9-30
(யாழ்ப்பாணம்)
CRAZY BOYS MUSKETEERS
குறும்புக்கார வாள் வீரர்கள்
Crazy Boys are back with the Musketeers to entertain you. Do join in their fun along with your kids.

From 19-3-77
A Tall Blond Man
With One Black Shoe
(color)

RIO (Jaffna) Daily 4 Shows
By Popular Demand
THE ARENA
(Adults only)

விஜயகுமார் கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
அபூர்வ ராகங்கள்

6-வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
(யாழ்ப்பாணம்) வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராஜா ஸ்ரீகாந்த் - பிரமிளா
[யாழ். நகர்] நாகேஷ் - லக்ஷ்மி (பசு)
தினசரி 4 காட்சிகள் (இன்று மட்டும் நடித்த
கோமாதா என் குலமாதா
ஈஸ்மன் கலர் (புதியபிரதி)

ஸ்ரீதர் ஃஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃஃ ஜெயலலிதா ஃஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் நாகேஸ்வரராவ்-சாவித்திரி
[யாழ். நகர்] நடித்த
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
மஞ்சள் மகிமை
18-3-77 முதல்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவகுமார்—ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
(புதிய பிரதி)

ராணி கண்ணப்பா - அஞ்சலிதேவி
[யாழ்நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
டவுண் பஸ் (புதிய பிரதி)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 4-30, 7-00 9-45
The Wild New World
(Color)

சங்கானைப் பிரச்னைக்கு உடன் தீர்வுகாணுங்கள்

எழுதுவினைஞர் சங்கம் பீலிக்ஸுக்கு கடிதம்

கொழும்பு, செவ்வாய்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவருமாறு கோரி கூட்டுறவு அமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவுக்கு எழுதுவினைஞர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கோரிக்கைகளை அங்கீகரித்து பிரச்னைக்குத் தீர்வுகாணுமாறு அதில் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தில் நடைபெற்றுவரும் நிர்வாக ஊழலை அறிந்திருந்தும், இது விடயத்தில் அரசு அசட்டையாகஇருப்பது கவலைக்குரியது என்றும், இதுவிடயத்தில் உடனடியாகத் தீர்வு அவசியமென்றும் இக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (ஆ)

சங்கானைக்கு ஆதரவாக பண்டத்தரிப்பு வேலை நிறுத்தம்

பண்டத்தரிப்பு. செவ்வாய்

சங்கானை வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இம்மாதம் 17-ந் திகதி அடையாள வேலை நிறுத்தம் செய்வதென அகில இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளன பண்டத்தரிப்புக் கிளை முடிவு செய்துள்ளது.

கிளைச் சங்கத் தலைவர் திரு. ச. பா. ஜோசப் தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடந்த கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

அலங்கார...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை, திருநெல்வேலி. அரசினர் கமத்தொழில் பண்ணை, கிளிநொச்சி. இளம் விவசாயிகள் கழகம், திருநெல்வேலி. இளம் விவசாயிகள் கழகச் சம்மேளனம், சனசமூக நிலையம், உரும்பராய். தீவுப்பகுதி பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம். சிறைச்சாலை இலாகா. எஸ். அந்தோனிப் பிள்ளை அச்சுவேலி. விக்ரர் இம்மானுவேல், சுருவில், ஊர் காவற்றுறை. ப.நோ. கூட்டுறவுச் சங்கம் (வரை) அச்சுவேலி. இளம் விவசாயிகள் கழகம் கோப்பாய். ப. நோ. கூட்டுறவுச்சங்கம் (வரை)பண்பண்டத்தரிப்பு.

பழைய மோட்டார் வாகன பவனியில் பங்கு பெறுவோர்: பி. ராஜரத்தினம் கல்வியங்காடு. எஸ். கந்தையா, வட்டுக்கோட்டை. ஆர். என், சின்னையா, ஆனைக்கோட்டை. எஸ். இளையபெருமாள், வல்வெட்டித்துறை. வி. கந்தையா, கைதடி. எஸ். நரசிங்கம் சுழிபுரம். உரிதையாளர், பரடைஸ் ஹோட்டல். ஆர். திருஞானசம்பந்தர், பருத்தித்துறை. எஸ். வடிவேலு, சுன்னாகம். மீரா லெப்பை ஷெய்ட் அஹமத், யாழ்ப்பாணம். (உ)

பதவி வெற்றிடம்

விற்பனை முகாமையாளர் தரம் 111

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் விற்பனை முகாமையாளர் தரம் 111 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் பூரணப்படுத்தி கல்வித் தராதரப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரப் பிரதி, அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரப்பிரதிகளுடன் 22-3-77 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் தலைவர், மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை நேரடியாகவோ அல்லது தபாலில் பெறவிரும்புவோர் ரூபா 1/- தபால் கட்டளையுடன் சொந்த விலாசமிட்ட காகித உறையுடன் அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

தகைமைகள்

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது,
2. கூட்டுறவு வேலையாளர் (உயர்தர) தராதரப் பத்திரமும் ஒரு வருடகால அனுபவமும் அல்லது,
3. கூட்டுறவு வேலையாளர் (சாதாரணதர) தராதரப்பத்திரமும் மூன்று வருட கால அனுபவமும்.

வயது: 23-40 வரை (22-3-77-ல்)

தகுதியுள்ள சங்கப் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

தலைவர்,
மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ. சங்கம்,
5703 மானிப்பாய்.

மானகர—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சின் அங்கிகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ள இவ் வேலையில் வேலைநிறுத்தம் அவசியமற்றது என்றும் கூறியுள்ளார்.

ஊழியர்களை நிரந்தரமாக்கும் விடயம், நாள் சம்பளத் தொழிலார்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது போன்ற பிரச்னை நிதி சமபந்தமானவை இவற்றை உள்ளூராட்சி அமைச்சின் அனுமதியுடனேயே செய்யமுடியும்.

சபையிலுல் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் தாங்களாகவே இப் பிரச்னைகளை மேலதிகாரிகளுடன் கலந்துரையாடுவதன் மூலம் தீர்க்கமுயற்சித் திருக்கலாம். அப்பாவித் தொழிலாளர்கள் ஒரு சிலரின் அபிலாசைகளுக்காக பலிக்கடாக்க ளாக்கப்படுகிறார்கள். பலஆண்டுகளாக தீர்க்கப்படாத பிரச்னைகளை, தீர்க்கப்படமுற்படும் வேளையில் அடையாள வேலை நிறுத்தம் செய்ய முற்படுவது வெண்ணெய் திரண்டுவரும் போது தாழியை உடைத்த கதையாகிவிடும் என்பதை உணரவேண்டும். இவற்றைக் கருத்திற்கொண்டு, மேலதிகாரிகளுடன் வெளியார் தலையீடின்றித் சுமுகமாக பிரச்னைகளை தீர்க்க முற்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது (ஆ)

கப்பட்டது.

பிரதமருக்கும், கூட்டுறவு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் இது சம்பந்தமாக கடிதங்களை அனுப்பி சங்கானை வேலை நிறுத்தத்திற்கு தீர்வுகாணும்படி கேட்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. (ஆ)

விளம்பரம்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது) பருத்தித்துறை.

பதவி வெற்றிடம்

கொள்வனவு எழுதுநர் தரம் III

மேற்குறிப்பிட்டிருக்கும் பதவி வெற்றிடத்திற்கு கீழ்க்காணும் தகுதியுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1. வயது:-

25க்கும் 45க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். (இச்சகத்தின் சேவையிலிருப்போருக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது)

2. கல்வித்தகைமை:-

1. எண்கணிதத்தில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண தரம்)

3. மேலதிக தகைமைகள்:-

1. ஆங்கிலம், சிங்களம் நன்முகப் பேசவும், வாசிக்கவும் கூடியவராக இருத்தல் வேண்டும்.
2. கொள்வனவுத்துறையில் அனுபவம் உள்ளவராய் இருத்தல்வேண்டும்.

4. வதிவுத்தகைமை:-

குறைந்தளவு 2 வருடமாவது யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

5. வேதனம்

ரூபா 135/- — 240/-
5×12, 7·50×6

6. விண்ணப்ப முடிவு திகதி:- 25-3-77

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் விண்ணப்பப்பத்திரம், பதிவுத் தபால் மூலம் ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு 25-3-77-ந் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும்போது, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''கொள்வனவு எழுதுநர் தரம் III'' பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். மற்றைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தலைவர்,
பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

திகதி:- 11-3-77.

5999

ஈழநாடு சந்தா
(தபால் மூலம் விநியோகம்)
(தினசரி – வாரமலர் உட்பட)
3 மாதம் ரூ. 47-00
6 மாதம் ரூ. 94-00
1 வருடம் ரூ. 188-00

ஈழநாடு
The EELANADU

ஈழநாடு சந்தா
(ஆள் மூலம் விநியோகம்)
(யாழ்- மாநகரசபை எல்லைக்குள்)
(தினசரி- வாரமலர் உட்பட)
3 மாதம் ரூ. 37-50
6 மாதம் ரூ. 75-00
1 வருடம் ரூ. 150-00

ஊழல் குற்றத்தை மறைக்க கருணாநிதி தந்திரமாம்

பக்தவத்சலம் சொல்கிறார்

(தமிழகத்திலிருந்து ஈழநாடு நிருபர் 'சாந்தா')

சென்னை, மார்ச்15

'காங்கிரஸ் ஒரு மக்கள் இயக்கம். இந்தப் பேரியக்கத்தின் வேர்கள் மிகவும் பரவலானது, ஆழமானது. பாரத மக்கள் அன்று எவ்விதம் காங்கிரஸ் பக்கம் இருந்தார்களோ அதே மாதிரி-அச்சுப்பிசகாமல் இன்றும் அப்படியே உள்ளனர். காங்கிரஸ் வெற்றிபெறுவது உறுதியானது. எந்த விஷ சக்தியினாலும் இதனைத் தடுக்க முடியாது. காங்கிரஸ் கட்சி தான் மீண்டும் அரசை அமைக்கும்' என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் இன்று எனக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

தளர்ந்த நிலையிலும்வீழ்ந்து கொடுக்காமல் சூழ்வளித்தேர்தல் சுற்றுலா மேற்கொண்டு வரும் திரு. எம். பக்தவத்சலம் எனக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

'தேர்தல் திடீரென வந்து விட்டதே என்று எதிர்க்கட்சியினர் அங்கலாய்க்கின்றனர். இதில் ஒரு புதுமையும் இல்லை. ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் என்பது ஒன்றும் அதிசயமான தல்ல.

ஆட்சி என்ன செய்கிறது என்பதை நாம் திடீரெனக் கூறித்தான் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றல்ல மக்கள் எப்பொழுதுமே விழிப்பாகத்தான் இருப்பார்கள். எந்த நேரத்திலும் அவர்கள் தயார் நிலையில் தான் இருப்பார்கள். இதனை நாம் அலட்சியம் பண்ணக் கூடாது. இன்று அறிவித்து நாளை மறுதினம் தேர்தல் நடந்தால்கூட யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மக்கள் உணர்ந்திருப்பார்கள். இதனைக் கருத்திற் கொண்டுதான் தேர்தலை நாம் திடீரென அறிவித்தோம்.

பிரிட்டனில்தேர்தலுக்கு ஒருமாத அவகாசமே

'பிரிட்டனில் என்ன நடக்கிறது? அங்கு பார்லிமெண்டுக்கு ஒரு மாதஅவகாசமே தரப்படுகின்றது. அதே முறையைத்தான் இந்தியாவிலும் பிரதமர் இந்திரா பின்பற்றியுள்ளார். இதனை மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள். ஆறு மாத அவகாசமளித்து வீண் செலவுகளும் ஆடம்பரக் களியாட்டங்களும் ஏற்படுவதை தவிர்த்து மக்களுக்கு ஆறுதல் அளித்துள்ளார் நமது பிரதமர். இது பாராட்டத்தக்கது.

அவசரநிலை

'அவசரகாலச் சட்டம் பற்றி எதிர்க்கட்சியினர் மிகவும் புலம்புகின்றார்கள். ஆனால், அவசரநிலை அறிவிப்பால்தான் நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மக்கள் ஏற்று விட்டனர் என்பது எதிர்க்கட்சியினருக்குப் புரியாததல்ல கள்ளக் கடத்தல் ஒழிந்தது, விலைவாசி குறைந்தது. நாட்டில் நிம்மதிப் பெருமூச்சு வெளிவருகிறது.

கருணாநிதி லஞ்ச ஊழல்...

'கருணாநிதி லஞ்ச ஊழல் விசாரணையிலிருந்து அவரது வக்கீல் சாந்திபூஷண் வெளி நடப்புச் செய்தார். எங்கெங்கோ அப்படிச் செய்தவர்கள் கோர்ட்டிலும் வெளிநடப்புச் செய்துள்ளனர். எதிர்வாதம் செய்வதை யாரும் தடுக்க வில்லை. லஞ்ச புகார்கள் நிரூபிக்கப்பட்டிருப்பதை நீதிபதி சர்க்காரியா நன்கு தெளிவாக்கியுள்ளார். தண்டனையிலிருந்து தப்பிக்க இப்போது கருணாநிதி ஒருதந்திரம் செய்கின்றார்! 1971-ல் இந்திராவை ஆதரித்த தி. மு. க. வினர் தங்கள் ஊழல்கள் அம்பலமானதை அடுத்து இப்போது எதிர்க்கின்றனர். தனது குற்றத்தை மறைக்க பா. ராமச்சந்திரனுடன் கருணாநிதி கூடிக் கொண்டு மக்களுக்கு இழைத்த தனது துரோகத்தை மறைக்கப்பார்க்கின்றார். மக்களின் அடிமனப் போராட்டத்திலிருந்து கருணாநிதிக் கும்பல் தப்பமுடியாது.

காங்கிரஸ் இணைப்பை காமராஜர் விரும்பினார்

இரண்டு காங்கிரஸும் இணைவதை காமராஜர் விரும்பினார். நான்கு ஆண்டுகளுக்குமுன்னர் கூனூரில் இந்த விருப்பத்தை காமராஜ் என்னிடம் வெளியிட்டார். இதனை நன்குபுரிந்தவர்கள் இணைந்துவிட்டனர். இதனை எதிர்த்து, சுயநலம் விரும்பியவர்கள் இன்று ஊழல் கட்சிகளுடன் இணைந்துவிட்டனர். பிற்போக்குவாதியான மொரார்ஜியுடன் இவர்கள் சேர்ந்துவிட்டார்கள். சாக்கடை நாற்றந்தான் நறுமணம் கொண்டது என்று கூறிக் கொண்டு அதில்போய் விழுபவனை நாம் எப்படித்தடுக்கவோ தூக்கி எழுப்பவோ முடியும். பிற்போக்குவாதிகளையும் நாட்டின் நலன் காக்கத்தவறிய புல்லுருவிகளையும் மக்கள் இன்று இனம் கண்டுவிட்டார்கள். மக்களின் அம்பு வீச்சிலிருந்து இவர்கள் தப்பமுடியாது. இந்திரா காந்தியின் வெற்றி உறுதியானது; தவிர்க்கமுடியாதது. மக்கள் இதனைத்தான் விரும்புகின்றார்கள். எதிர்க்கட்சிகளின் பொம்மலாட்டம், மக்களிடம் இன்று எடுபடாது. காங்கிரஸ் ஆட்சி மலருவதையே மக்கள் இன்று விரும்புகின்றார்கள். இது நிச்சயம்.''

—

அரிசி, மா ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செலவினங்களும் ரூபா மதிப்பு அதிகரிப்பினால் குறைந்துள்ளது.

இக்காரணங்களால் உள்ளூர் பல இறக்குமதிப் பொருட்களைக் குறைந்தவிலையில்பொது மக்கள் வாங்கக்கூடியதாக இருக்கும் என்று திட்டமிடல் பொருளாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எச். ஏ. டி. எஸ். குணசேகரா தெரிவித்தார்.

நெல் உற்பத்தி

நெல் உற்பத்திக்கான உரவகைகளை அதிக அளவில் இறக்குமதி செய்யக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளதால், அதிக உரத்தை இறக்குமதி செய்து நெல் உற்பத்தியை அதிகரிக்கச்செய்யும் பட்சத்தில் இறக்குமதியாகும் அரிசியுடன் உள்ளூரில் உற்பத்தியாகும் அரிசியின் விலையும் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இறக்குமதியாகும் தேயிலைப் பெட்டிகளின் தொகையை மேலும் அதிகரிப்பதன் மூலம் தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தை விஸ்தரிக்க முடியும் என்றும் அவர் கூறினார். (இ)

வண்ணை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்துவார்.

இன்று புதன்கிழமை காலை 9-30 மணிக்கு பூஜையும், காலை 9-45 மணிக்கு துவகாரேகேணமும் நடைபெறும். (உ)

யாழ்லயன் களியாட்டு விழா

'ரோரு' ஸ்தாபன ஆதரவில் மாட்டுவண்டிச் சவாரிபோட்டி

ஞாயிறு பிற்பகல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரிக்காக நடைபெறும் யாழ்லயன் களியாட்டு விழாவில் 'த ரோரு லிமிட்டெட்' ஸ்தாபனத்தார் மாண்டுவண்டிச் சவாரிப்போட்டியைத் தமது ஆதரவில் நடத்தவுள்ளனர்.

யாழ். முற்றவெளி மைதானத்தில் இம்மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருக்கும் இப்போட்டி ஏ, பி, சி என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும். தனி மாட்டுவண்டிச்சவாரிப்போட்டியும் இடம்பெறும்.

கடந்தகால மாட்டுவண்டிச் சவாரிப்போட்டிகளில் வெற்றிப்பரிசில்களைத் தட்டிக் கொண்ட மாடுகள் இப்போட்டியில் பங்குபற்ற இருக்கின்றன.

போட்டிகளில் பங்குபற்றுவோர் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு முன்பாக மைதானத்திற்குவந்து பதிவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. வெற்றிபெறும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு 'த ரோரு லிமிட்டெட்' ஸ்தாபனத்தார் விலையுயர்ந்த கவர்ச்சிப் பரிசில்கள் வழங்கவுள்ளனர். (உ)

அலங்கார ஊர்திகள் பவனி

யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக யாழ்லயன் கழகம் நடாத்தவிருக்கும் யாழ்லயன் களியாட்டு விழாவில் எதிர்வரும் 19-ம் திகதி காலை 7-30மணிக்கு அலங்காரஊர்திகள் பவனி நடைபெற விருக்கின்றது.

இவ்வூர்திகள் பவனியில் யாழ்லயன் கழகம் முன்னணியில் செல்லும். வர்த்தக ஊர்திகள் பவனியில் பங்குபற்றும் நிறுவனங்கள் பின்வருமாறு:- (அ) எஸ். வி. முருகேசு, வி. எம். சண்முகம், சினேத்துரை பிறதர், சுபாஸ் ஐஸ்கிறீம், றியோ ஐஸ் கிறீம், பிளவுஸ், ராஜா கிறீம் ஹவுஸ், சிலோன் மேச் சண்டஸ் லிமிட்டெட், எக்ஸெல்ஸ், ரோரு லிமிட்டெட்.

(பி) கைதொழில் அலங்கார ஊர்திகள் பவனியில் பங்குபற்றும் நிறுவனங்கள்:- சிநோர் டெவலப்மெண்ட், பெலிண்டேஷன் லிமிட்டெட், மில்க்வைற் சவர்காரத் தொழிலகம், லாலா சோப் அச்சுவேலி, அண்ணு இன்டஸ்றீஸ் கொக்குவில் (சி) விவசாய அலங்கார ஊர்திகள் பவனியில் பங்குபெறும் நிறுவனங்கள் பின்வருமாறு:

அரசினர் கமத்தொழிற்பாட 7ம் பக்கம் பார்க்க

—

இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களிப்பு ஆரம்ப தினத்தில்மட்டும் 19 கோடி மக்கள் வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது என புதுடில்லி செய்தியொன்று தெரிவிக்கின்றது.

தமிழ்நாட்டில்

தமிழ் நாட்டில் 16-ம் திகதி பாண்டிச்சேரி உட்பட 20 தொகுதிகளிலும் 19-ம் திகதி மிகுதி 20 தொகுதிகளிலும் வாக்களிப்பு நடைபெறும்.

மாநிலங்கள்

லோகசபைத் தொகுதிகளின் விபரம்:-

ஆந்திரா	42
அஸ்ஸாம்	14
பீகார்	54
குஜராத்	26
ஹரியானா	10
இமாசலப்பிரதேஷ்	4
ஜம்மு—காஷ்மீர்	6
கர்னாடகம்	28
கேரளா	20
மத்தியப்பிரதேஷ்	40
மகாராஷ்டிரம்	48
மேகாலயா	2
மணிப்பூர்	2
நாகலாந்து	1
ஒரிசா	21
பஞ்சாப்	13
ராஜஸ்தான்	25
சிக்கிம்	1
தமிழ்நாடு	39
திரிபுரா	2
உத்தரப்பிரதேசம்	85
மேற்கு வங்காளம்	42

புதிய லோகசபையில் மாநிலங்களில்இருந்து 525 எம்.பி.க்கள் இடம்பெறுவர். கலைக்கப்பட்ட லோகசபையில் மாநிலங்களில் இருந்து 506 எம்.பி.க்கள் இருந்தனர்.

யூனியன் பிரதேசங்கள்

யூனியன் பிரதேசங்கள் வருமாறு:-

அந்தமான் நிக்கோபார் தீவுகள்	1
அருணாசலப்பிரதேஷ்	2
சண்டிகார்	1
தத்ரா மற்றும் நாகர்ஹவாலி	1
டில்லி	7
கோவா, டாமன், டையூ	2
லட்சத்தீவு	1
மிஸோராம்	1
பாண்டிச்சேரி	1

புதுலோகசபையின் யூனியன் பிரதேசங்களில் இருந்துமொத்தம் 17 எம்.பி.க்கள் இடம் பெறுவர். கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் யூனியன் பிரதேசங்களில் இருந்து மொத்தம் 16 எம்.பி.க்கள் தான் இருந்தனர்.

—

வாசுதேவா—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிகின்றது.

கட்சிக்குள் வர்க்கபேதம் ஒழிக்கப்படவேண்டும் என்றும் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைக்கப்படும்போது அதில் சகலஇடதுசாரி இயக்கங்களும் இடம்பெறும் வகையில் இடதுசாரி தலைவர்களையும் கட்சி பிரதிநிதிகளையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் திரு. நாணயக்கார ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

இதேசமயம் டாக்டர் பெரேரா ஜெனிவாவிலிருந்து நாடு திரும்பியவுடன் திரு. வாசுதேவ நாணயக்காராவைக் கட்சியில் தற்காலிகமாக நிறுத்தி வைத்ததைக் கண்டித்ததாகவும் தெரிகின்றது.

திரு. நாணயக்காராமீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை உடனடியாக வாபஸ் பெறும்படி கட்சிக் கிளைகளிடமிருந்து தந்திகளும், கடிதங்களும் கட்சி மேலிடத்துக்கு வந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. பெரும்பாலும் எட்டுக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்தே இப்படியான கோரிக்கைகள் அதிகமாகக்கிடைக்கின்றனவாம்.

வாக்குகள் இரவில் எண்ணப்படமாட்டாது

புதுடில்லி, மார்ச் 15

வாக்குச்சீட்டுக்கள் இரவு நீண்டநேரம் வரை எண்ணப்படமாட்டாது என்று இந்திய பிரதம தேர்தல்கமிஷனர் திரு. பி. சுவாமிநாதன் தெரிவித்தார்.

மின்சாரத்தடைஏற்பட்டு எண்ணிக்கை வேலைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கும் எண்ணிக்கைப் பணிகளில் ஈடுபட்டுவரும் ஊழியர்களின் அசௌகரியங்களைத் தவிர்க்கும்பொருட்டுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையுமே வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49. Jaffna. Telegram: Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.